# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## திறன் விருத்தி கற்கைகள் நிலையம்
## (கூட்டிணைத்தல்)

**திறன் விருத்தி கற்கைகள் நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன அவர்களால் 2021, திசெம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, திசெம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

**[ 97 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *18.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திறன் விருத்தி கற்கைகள் நிலையம்
## (கூட்டிணைத்தல்)

## திறன் விருத்தி கற்கைகள் நிலையத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை

"திறன் விருத்தி கற்கைகள் நிலையம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிலையமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிலையத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களை யும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் , சொல்லப்பட்ட நிலையமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட நிலையத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

***1***. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, திறன் விருத்தி கற்கைகள் நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

திறன் விருத்தி கற்கைகள் நிலையத்தைக் கூட்டிணைத்தல்

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திறன் விருத்தி கற்கைகள் நிலையத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "திறன் விருத்தி கற்கைகள் நிலையம்" என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும்

வேண்டுமென்பதோடு அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டிணைக்கப்பட்ட குழு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) எல்லா மட்டங்களிலும் திறன் விருத்திக்கான கல்வியறிவை ஊக்குவித்தல்;

(ஆ) பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்;

(இ) வேலையற்றவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்பாடு செய்தல்;

(ஈ) சட்ட தொழில்சார் மற்றும் திறன் விருத்தி தொடர்பான பாடநெறிகள் போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் அதுபோன்ற அம்சங்களை ஏற்பாடு செய்தல்;

(உ) அறிவியற் கற்கைகளின் முன்னேற்றத்திற்காக தகவல் தொழில்நுட்ப நிலையங்களைத் தாபித்தல்;

(ஊ) இனம், மதம் அல்லது சாதி பற்றிய வேறுபாடின்றி கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் உதவுதல்;

(எ) விரிவுரைத் தொடர்கள், கருத்தரங்குகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து சட்டத்துறை நுழைவுக்கான பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்களை ஊக்குவித்தல்; அத்துடன்

(ஏ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைதலும் ஒத்துழைத்தலும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**4.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் மேலும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழு ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது முகாமைத்துவக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுவான தத்துவங்கள்*

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டிணைக்கப்பட்ட குழு தத்துவமுடையாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப் பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவத்துவமும் அடங்கும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் விதிகள்

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக் கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையா தோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மை வகைப்படுத்தலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், மீளப்பெறுதலும் அல்லது விலக்குதலும்;

(ஆ) பதவி தாங்குனர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குனர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியை வறியதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும் மற்றும் கடமைகளும் மற்றும் குழு உறுப்பினர்களின் பதவிக் காலமும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களின தும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்க ளும் நடத்தைகளும், கடமைகளும், பணிகளும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அக் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்தலும், அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரலும் அக்கூட்டநடப்பெண் ணும் அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித் தலும், முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணலும் கணக்காய்வு செய்தலும்; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அத்துடன் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

நிலையத்தினால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப் படற்பாலனவு மான கடன்கள்

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற நிலையத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் மன்றத்திற்கு செலுத்தப் படுதலும் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்

**8.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவினால் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**9**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டிணைக்கப்பட்ட குழு ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அல்லது அதற்கு உரித்தாக வரக்கூடிய தான ஏதேனும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய இயலுமானதாலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 06 ஆம் பிரிவில் ஆக்கப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழு விதிகளுக்கமையும், அவற்றை விற்க, ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப்பட்ட தன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**10**. கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது: ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை உடையதுமான அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்

**11**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதி ஆண்டு ஒரு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது அதன் வருமானமும் செல வினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவ ராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவு முள்ள தனியாள் ஒருவர் ;

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**12.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலட்சினையானது, முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பது டன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக் கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.